**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், எம்.எ., பி.எல்.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 06ம் நாள் புதன்கிழமை

**IA.No.04/2025 in OS.No.182/2023**

**TNTM 03000400/2023**

நிர்மலா, ... மனுதாரர் / வாதி

/எதிராக/

1. ராஜகாந்தன்
2. உமா
3. நாகராஜி
4. சார்பதிவாளர்,
   ஆரணி சார்பதிவகம் ஆரணி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 30.07.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.திருஞானம்,B.A.,BL., அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.தினேஷ் பாலாஜி,B.Tec., LL.B., அவர்கள் முன்னிலையாகியும், 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.K.R.Rajan, M.A.B.L., கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் ஆவணங்களாக ஏற்க அனுமதி வழங்கக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(2)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர், அசல் வழக்கில் வாதி ஆவேன். அசல் வழக்கை பாகப்பிரிவினை கோரி பிரதிவாதிகளுக்கெதிராக தாக்கல் செய்துள்ளேன். நானும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தாவா ஷெட்யூல் சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது. அதில் சட்டப்படி எனக்கு ¼ பாக உரிமை உள்ளது. நான் மேற்சொன்ன வழக்கு தாக்கல் செய்த பின்னர் எனக்கு தாவா ஷெட்யூல் சொத்தில் உள்ள பாகத்தை எனக்கு கொடுக்காமல் ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் 3ம் பிரதிவாதி, தவறான சங்கதிகள் கண்டு 20.09.2023 அன்று

வழக்கறிஞர் வாயிலாக ஒரு அறிவிப்பு அனுப்பினார். மேற்சொன்ன அறிவிப்பில் 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து சம்பந்தமாக 27.05.2020 தேதியில் ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். மேற்சொன்ன ஆவணம் என் பாக உரிமையை கட்டுப்படுத்தாது. மேற்சொன்ன 20.09.2023ல் 3ம் பிரதிவாதி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் 1, 3 பிரதிவாதிகளுக்குள் 27.05.2020ல் ஏற்படுத்தப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஆகியவற்றை வழக்கில் என் தரப்பு கூடுதல் ஆவணங்களாக சேர்க்க வேண்டியது அவசியம். மேற்சொன்ன ஆவணங்களை வழக்கில் ஏற்பதால், எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்று இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**2. 1முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை யின் சுருக்கம்:– (4ம் எதிர்மனுதாரர் 1முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை ஏற்றுக்கொள்ளவதாக குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்).**

மனுதாரர் மனுவில் முதல் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரருக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் மற்றும் 20.09.2023 அன்று 3ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவற்றை அவர் தரப்பில் கூடுதல் ஆவணங்களாக ஏற்கக் கோரி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் ஏற்கக் கூடியதல்ல. மேற்சொன்ன வழக்கில் இவ்வெதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரை சங்கதிகளை இதன் ஓர் அங்கமாக பாவிக்க இவ்வெதிர்மனுதாரர்கள் கனம் கோர்ட்டார் அவர்களை கேட்டுக்கொள்கிறார்கள். மனுதாரர் மனுவில் தாவா ஷெட்யூல் சொத்து அவர் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் ¼ பாகம் உள்ளதென்றும் சொல்வது ஏற்கக் கூடியதல்ல. மேலும் 3ம் எதிர்மனுதாரர் 20.09.2023 அன்று அவரது வழக்கறிஞர் வாயிலாக சரியான மற்றும் உண்மை சங்கதிகளை கூறி மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்சொன்ன அறிவிப்பினை வேண்டுமென்றே மனுதாரர் வழக்கு தாவாவுடன் தாக்கல் செய்யாமல் மறைத்துவிட்டு, தற்போது தாக்கல் செய்து அதனை ஏற்கவேண்டுமென கோருவது ஏற்புடையதன்று.

3. மேலும் 27.05.2020 தேதியில் 3ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருக்க ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லும், அதனை கேள்வி எழுப்ப மனுதாரருக்கு உரிமையில்லை. உண்மையில் மேற்சொன்ன ஆவணத்தை இவ்வெதிர்மனுதாரர்கள் தங்கள் பதிலுரையுடன் கனம் நீதிமன்றத்தில் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளனர். எனவே மனுதாரர் தரப்பில் மேற்சொன்ன ஆவணத்தை மீண்டும் ஏற்க வேண்டிய அவசியமில்லை. மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும்போதே மேற்சொன்ன ஆவணங்கள் அவர் வசம் இருந்துள்ளது என்பதை அவர் ஒப்புகிறார்.

ஆனால் அவற்றை ஏன் தாவாவுடன் தாக்கல் செய்யவில்லை என்பதற்கு சரியான காரணம் கூறாமல் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்கக் கூடியதல்ல. எது எப்படி இருப்பினும் மனுதாரர் தற்போது ஏற்கக் கோரும் ஆவணங்கள் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனவே அவற்றை தற்போது ஏற்க கோருவது ஏற்புடையதல்ல. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை இவ்வெதிர்மனுதாரர்கள் செலவுடன் தள்ளுபடி செய்யுமாறு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

5. மனுதாரர், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

6. <u>**பிரச்சனைக்கான தீர்வு:–**</u>

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கை பாகப்பிரிவினை கோரி பிரதிவாதிகளுக்கெதிராக மனுதாரர் தாக்கல் செய்திருந்தார். அசல் வழக்கு வாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 3ம் பிரதிவாதி தரப்பில் வாதிக்கு அனுப்பப்பட்ட 20.09.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் 3ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் ஆகியவற்றை வாதி தரப்பில் சான்றாவணங்களாக ஏற்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், 3ம் பிரதிவாதி 27.05.2020 தேதியில் பெற்ற ஆவண செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து தங்களது எதிர் வழக்குரையில் விவரம் கூறியிருக்கிறார்கள். 20.09.2020 தேதியிட்ட 3ம் பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை வேண்டும் என்றே மனுதாரர் வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளார். மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும்போதே இம்மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் அவர் வசம் இருந்துள்ளது. அதனை வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு தகுந்த காரணம் இம்மனுவில் கூறவில்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

8. அசல் வழக்கானது பாக பிரிவினை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து குறித்து இருதரப்பினருக்கும் உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு இம்மனுவில் குறிப்பிட்டுள்ள

27.05.2020 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் மற்றும் 20.09.2023 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ஆகியவை உதவிகரமாக இருக்கும் என்பதால், இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவில்,** மனுதாரரின் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S Digitally signed by BASKARAN S Date: 2025.08.06 18:01:57 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:-</u> இல்லை

BASKARAN S Digitally signed by BASKARAN S Date: 2025.08.06 18:02:09 +0530

சார்பு நீதிபதி,
ஆரணி.